இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகளை காவல் துறையினர் விரைவில் கண்டுபிடிப்பார்கள் என்பதையும், அதற்காக ஒரு தனிக் காவல் படை அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) சீர்காழியிலிருந்து கொண்டல், ஆதமங்கலம், தலைஞாயிறு, பட்டவர்த்தி வழியாக மயிலாடுதுறை செல்லும் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவனஈர்ப்பு. திரு.து. மூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. து. மூர்த்தி:

திரு து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழியிலிருந்து கொண்டல், ஆதமங்கலம், தலைஞாயிறு, பட்டவர்த்தி வழியாக மயிலாடுதுறை சென்று கொண்டிருந்த சோழன் பேருந்து நிறுத்தப்பட்டதால், அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சீர்காழியிலிருந்து மயிலாடுதுறை (வழி) கொண்டல், ஆதமங்கலம், தலைஞாயிறு, பட்டவர்த்தி, தடத்தில் 24.4.1993 முதல் ஒரு பேருந்து 6 நடைகள் இயக்கப்பட்டது. இத்தடத்தில் ஆதமங்கலம் முதல் தலைஞாயிறு வரையிலான 2 கி.மீ. சாலை மழை நீரின் வேகத்தால் அறுக்கப்பட்டு மேடு பள்ளங்கள் நிறைந்து பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் இருந்ததால் பேருந்து இயக்கம் 1-4-1994 முதல் நிறுத்தப்பட்டது. சாலையைச் செப்பனிட கோட்டப் பொறியாளர், நாகப்பட்டினம், அவர்களுக்கு சோழன் போக்குவரத்துக் கழகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சாலை சரி செய்யப்பட்டவுடன் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1995 ஏப்ரல் 18]

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் சீர்காழியிலிருந்து ஆதமங்கலம், தலைஞாயிறு, பட்டவர்த்தி வழியாக மயிலாடுதுறை செல்லும் இந்த டவுன் பஸ் விட்டவுடன் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் நல்ல முறையில் பயன்பெற்றார்கள். இந்தப் பகுதியிலிருந்து மயிலாடுதுறை செல்வதற்கும், மணல்மேடு செல்வதற்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் அனைவரும் இந்த பஸ்ஸில் செல்வதற்கு வசதியாக இருந்தது. மேலும்,. தலைஞாயிறு சர்க்கரை ஆலையிலுள்ள பணியாளர்கள் மற்றும் அந்தச் சுற்று வட்டாரத்தில் உள்ள அனைவரும் பயன்பெற்று வந்தார்கள். இடையில் நிறுத்திவிட்டதால் அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், சாலை சரியில்லையென்று கூறினாலும்கூட, சாலையை உடன் சர்க்கரை ஆலை மூலம் செப்பனிட்டு அந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், அரசு ஊழியர்கள் அனைவரும் பயன் பெறுகின்ற வகையிலும், மேலும் அந்தப் பகுதி வழியாக கரும்பு ஏற்றிச் செல்வதற்கு வசதியாகவும் சாலையை செப்பனிட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பஸ்ஸை விடுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையின் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாலைகள் அரித்து செல்லப்பட்டிருக்கின்றன. பேருந்துகளை அங்கே இயக்குவதற்கு முடியவில்லை. ஆகவே, அந்தச் சாலை செப்பனிடப்பட்டவுடனே அடுத்த நாளே பேருந்துகள், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசால் இயக்கப்படும்.

முற்பகல் 11.50

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலையை செப்பனிட்டவுடன் பஸ் இயக்கப்படும் என்று கூறினார்கள். மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அதேபோல, கோட்டப் பொறியாளர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருப்பதாக விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று தலைஞாயிறு அருகில் உள்ளது. இந்த சர்க்கரை ஆலை அதிகமான இலாபத்தில் இயங்கி வருகிறது. எனவே, இந்த ஆலையின் மூலம் சில சாலைகளை எடுத்து அதனை செப்பனிட்டு வருகிறார்கள்.

அந்த வகையிலே இந்தச் சாலையையும் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் எடுத்து அகலமங்கலம், தலைஞாயிறு சாலைகளை செப்பனிட்டு டவுன் பஸ் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலிருந்து அங்கு இருக்கக்கூடிய நிதியை வைத்துக்கொண்டு சாலையை செப்பனிட முடியுமா என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு தனிக் கேள்வி போட்டு அவர் அதை உடனடியாக செப்பனிட்டவுடனே நான் அந்தப் பணிகளைச் செய்ய முடியும். எங்களுடைய பேருந்துகளைப் பொறுத்தவரையில் பள்ளப் பகுதியாக இருப்பது உங்களுக்கே தெரியும். மழையின் காரணத்தினால்தான் சாலைகள் அரிக்கப்பட்டு பேருந்துகளை இயக்க முடியவில்லை. நீங்கள் வேண்டுமானால் ஓரளவுக்கு அந்தப் பள்ளப் பகுதியை நிரப்பினால் பேருந்துகளை இயக்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொண்டால் அடுத்த நாளே பேருந்தை இயக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) வெளிநாடுகளுக்கு 'வெங்காயம்' ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடைவிதித்துள்ளதால் விவசாயிகள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவனஈர்ப்பு, திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலிருந்து வெங்காயம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு திடீரென்று தடை விதித்ததால் விவசாயிகளிடையே ஏற்படும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.